விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 மாசி 5 ஜ- அவ் 25 இதழ் 6
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 16-2-1985

### மன்னூர் சம்பவங்களை கண்டித்து

## மாணவர்கள் ஆர்ப்பாட்டம்!

[யாழ்ப்பாணம்]

மன்னூரில் உள்ள வட்டக்கண்டல் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் உட்பட மூன்று ஆசிரியர்கள் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானதைக் கண்டித்து நேற்றுக் காலை யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலை வாசல்களில் மாணவர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 50 ஆயிரம் மாணவ - மாணவிகள் பங்குபற்றினர்கள்.

மன்னூர் சம்பவத்தைக் கண்டிக்கும் மகஜர் ஒன்றையும் யாழ். மாணவர்கள் பிரதிநிதிகள்குழு ஊர்வலமாகச் சென்று வட மாநிலக் கல்விப் பணிப்பாளரிடம் கையளித்தது

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''மன்னூரில் உள்ள வட்டக்கண்டல் என்ற இடத்திலுள்ள பாடசாலையின் அதிபர் திரு வி. சுந்தரமூர்த்தி, ஆசிரியர்கள் திரு. மகேந்திரன், திரு. இரட்ணதுரை ஆகியோர் விடுதியில் வைத்து 30-1-85 அன்று கொல்லப்பட்டுள்ளனர். அண்மையில் உள்ள பாடசாலை ஆசிரியைகள் மானபங்கப்படுத்தப்பட்டுள்ளனர். மன்னூர் பகுதியில் உள்ள அடம்பன் மகா வித்தியாலயம், ஆட்காட்டிவெளி அ. மிஷன் கல்லூரி, கருங்கண்டல் ரோ. க பாடசாலை, வட்டக்கண்டல் மகா வித்தியாலயம் ஆகியவை

(6-ம் பக்கம் 2-ம் கலம் பார்க்க

## அகதிகள் வருகையால் இந்தியாவின் நிலைமோசம்!
## இலங்கை தூதரிடம் கண்டனம், நேற்றும் 704 பேர்

[சென்னை]

இலங்கைத் தமிழ் அகதிகள் 704 பேர் நேற்றும் ராமேஸ்வரத்தை வந்தடைந்தனர்.

இலங்கையிலிருந்து தினமும் அகதிகள் வருவதனால் இந்தியாவின்நிலை மோசமடைந்து வருவதாக வெளியுறவு அமைச்சின் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி, இலங்கைத் தூதுவர் திரு. திலகரத்னவிடம் எடுத்துக் கூறியுள்ளதுடன், இந்திய மீனவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டமை குறித்து இந்தியாவின் கவலையையும் தெரிவித்துளளார்.

நேற்று 704 இலங்கைத் தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் வந்தடைந்தனர். இவர்கள் 14 விசைப்படகுகளில் இங்கு வந்தனர்.

நேற்று அகதிகளாக வந்த 704 பேரில் 135 குடும்பத்தைச் சேர்ந்த 631 பேர் இராமேஸ்வரத்தையும் 18 குடும்பத்தைச் சேர்ந்த சேர்ந்த 73 பேர் பாம்பனையும் வந்தடைந்துள்ளனர்.

இதேவேளை தமிழக அரசு இலங்கை அகதிகள் விடயத்தில் மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றது. இவர்களின் உதவிகளுக்கென ஐந்து லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தலைமைச் செயலாளர் திரு. கே சொக்கலிங்கம் கூறியுள்ளார்,

இலங்கைத் தமிழர்கள் வந்தடையும் அகதி

(6-ம் பக்கம் 5ம் கலம் பார்க்க]

# முல்லைத்தீவுப்பகுதியில் 58 பேர்
# ராணுவத்தினால் சுட்டுக்கொலை!

### தீவிரவாதிகள் என்று 'லலித்' அறிவிப்பு

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவுப் பகுதியில் ராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் 58 பேர் கொல்லப்பட்டுள்ளனர்!**

இந்த 58 பேரும் தீவிரவாதிகள் எனவும், இவர்களிடமிருந்து துப்பாக்கிகள், வெடிமருந்துகள் மீட்கப்பட்டதாகவும் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தில் படைவீரர்கள் எவரும் காயப்படவில்லை எனவும், இந்தப் பகுதிகளில் மக்கள் அனைவரும் குடிபெயர்ந்து விட்டதால் தீவிரவாதிகளைத் தாக்குவது சுலபமாகியிருந்ததாகவும் அமைச்சர் கூறினர்.

சிங்கப்பூரில்

### பத்திரிகையாளரைச் சந்திக்க பிரதமர் பிரேமா மறுப்பு!

(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் வநதுள்ள இலங்கைப் பிரதமர் திரு. ஆர். பிரேமதாஸா பத்திரிகையாளர்களைச் சந்திக்க மறுத்துவிட்டார். சிங்கப்பூர் பிரதமர் திரு லீகுவான்யுவைச் சந்தித்துப் பேசிய விபரங்களையும் அவர் தெரிவிக்க மறுத்து விட்டார்.

திரு. பிரேமதாஸா கடந்த புதன் கிழமை சிங்கப்பூர் வந்தடைந்தார். இவர் இங்கு 4 நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இங்கு வைபமொன்றில் பேசுகையில், சிங்கப்பூர் பாணியிலேயே பயங்கரவாதத்தை ஒழிக்க இலங்கை அரசு செயல்பட்டு வருவதாக அவர் கூறினர். (கி]

### 'சுந்தர்' பூதவுடல் நாளை தகனம்!

[வவனியா]

காலஞ்சென்ற 'அடங்காத் தமிழன்' ஸி.சுந்தரலிங்கத்தின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை நடைபெறவுள்ளது

பூதவுடலைத் தாங்கிய ரதம் நாளை காலை 9 மணிக்கு பிர

[6ம் பக்கம் 5ம் கலர் பார்க்க

## முகாம்களிலிருந்து சென்ற பலர் திரும்பவில்லையாம்!

[யாழ்ப்பாணம்]

முல்லைத்தீவு அகதிகள் முகாம்களிலிருந்து தங்கள் வீடுகளையும், தோட்டங்களையும் பார்ப்பதற்காகச் சென்ற வயோதிபர்கள் பலர் இன்னும் முகாமுக்குத் திருமபவில்லையெனத் தெரியவருகிறது.

முல்லைத்தீவிலுள்ள 19 அகதிகள் முகாம்களிலிருந்து இம்மாதம் 10ம் தேதிக்குப் பின்னர் காணமல்போனவர்கள் பற்றிய விபரம் திரட்டப்பட்டு வருகிறது.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு கே. ஞானச்சந்திரனின் பணிப்பின்பேரில் முகாம்களில் காணமல்போனவர்களின் பட்டியல் திரட்டப்பட்டுவருகிறது.

வழக்கமாக முகாம்களிலிருந்து தங்கள் வீடுகளைப் பார்க்கச் செல்பவர்கள், முகாம் பொறுப்பாளர் மூலம் அனுமதி பெற்றே செல்வதுண்டு. சிலர் தங்கள் வீடுகளையும், தோட்டங்களையும், ஆடு மாடு கோழிகளையும் பார்த்துவர அனுமதி

(5ம்- பக்கம் 4-ம் கலம்பார்க்க)

### லொறியில் ஜீப் கடத்தல்!

[யாழ்ப்பாணம்]

வட பிரதேச போக்குவரத்து சபைக்கு சொந்தமான பழுதடைந்த ஜீப் வண்டி துப்பாக்கி இளைஞர்களால் கடத்திச்செல்லப்பட்டுள்ளது

(6ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

### ● 17 லட்சம் ரூபாவை கனடாவழங்குகிறது
## யாழ். நகரில் அமைக்கப்படும் 'கனேடிய தீயணைக்கும் படை'!
### சாதனங்கள் நாளை கொழும்பு வருகிறது

(யாழ்ப்பாணம்)

''யாழ் மாநகர சபையின் தீயணைக்கும் படைக்கு கனடாவிலுள்ள பொதுஸ்தாபனங்கள் இலங்கையிலுள்ள கனடா தூதுவர் மூலம் சுமார் 17 லட்சம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கவுள்ளது, இதனால் தீயணைக்கும் படைக்கு 'கனேடியன் தீயணைக்கும் படை' என்று பெயரிடப்படும்,'

யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு சி வி. கே. சிவஞானம் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

யாழ். மாநகரசபை கமிட்டி அறையில் நேற்றுக்காலை நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் ஆணையாளர் திரு. சிவஞானம் மேலும் தெரிவித்ததாவது:

லண்டனிலிருந்து பெறப்பட்ட தீயணைக்கும் படையின் இயந்திர சாதனங்களும் வாகனமும் நாளை ஞாயிற்றுக் கிழமை கப்பல்மூலம்கொழும்பு வந்துசேருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

''ஏற்கனவே இதற்காக பொது ஸ்தாபனங்களிடமும், மக்களிடமும் சேகரிக்கப்பட்ட சுமார் 5 லட்சம் ரூபாவும் மேலும் பெறப்படு நிதியும் நிலையான வங்கியிருப்பில் போடப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் பணத்தைக்

(6ம் பக்கம் 3ம் கலம் பார்க்க )

### பத்திரிகையாளர் மூவரும் விடுதலை

[கொழும்பு]

வடபகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட மூன்று பிரிட்டிஷ் பத்திரிகையாளர்களும் நேற்று விடுதலை செய்யப்பட்டனா,

சாவகச்சேரியில்

### ரூ. 9 லட்சம் உபகரணங்கள் துப்பாக்கிமுனையில் கொள்ளை!

[மட்டுவில்]

சாவகச்சேரியில் ஒன்பதுலட்சம் ரூபா பெறுமதியான நீர் விநியோகத் திட்டக் கருவிகளும், ஏனைய உபகரணங்களும் இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9-00 மணியளவில் சாவகச்சேரி நீர் விநியோகத் திட்ட அலுவலகக் களஞ்சியப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அலுவலகத்தின் சுற்றுப்புறத்தில் பல இளைஞர்கள் பாதுகாத்து நிற்க, ஒன்பது துப்பாக்கி இளைஞர்கள் களஞ்சிய அறையினுள் புகுந்து அங்கு கடமையிலிருந்த பாதுகாப்பு அதிகாரியையும், இரவுக் காவலாளியையும் துப்பாக்கி முனையில் நிறுத்திவைத்து இக் கொள்ளையை நடத்தியுள்ளனராம்.

# அசி விளம்பரம்

## விற்பனைக்கு

அழுத்தமான ஆட்டுக்கல், அம்மி, கல்உரல் அனைத்தும் கைதேர்ந்த கலைஞர்களால் கடையப்பட்டது. தயாரித்து அளிப்போர், சூரியாஸ்டோர்ஸ் வவுனியா. கந்தசாமி கோவில் வீதி, சாவகச்சேரியில் அல்லது சுல்தான் அப்துல் காதர் சகோதரர்கள், கண்டி வீதி, சாவகச்சேரி. 1787

---

யாழ்ப்பாணம் பீச் றோட்டில் 1½ பரப்புக் காணியில் மாடி வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: லிப்ருஸ் லிமிட்டெட், R. G. பில்டிங், 70- ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1836

---

யாழ்ப்பாணம் K. K. S. வீதியில் புதிய கல்வீடு மூன்று படுக்கை அறைகள், கார் கருஜ் மற்றும் சகல வேலைகள் முடிவடைந்த நிலையில் 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: லிப்ருஸ் லிமிட்டெட், R. G. பில்டிங், 70-ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1835

---

யாழ்ப்பாணம் சினிவாசகம் வீதியில் 2 பரப்பு வீடு கட்டக்கூடிய காணித் துண்டும், ஆஸ்பத்திரி வீதியில் ½ பரப்புக் காணியும் வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: லிப்ருஸ் லிமிட்., R. G. பில்டிங், 70- ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1837

---

உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் 3 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு தொடர்பு:- T. R. J. ஜெயராஜா, 18, டச் றோட், உடுவில். 1771

---

யாழ்ப்பாணக் கச்சேரி, பிரபல கல்லூரிகள் ஆகியவற்றுக்கு அண்மையில், ஈச்சமோட்டையில் வீடுகட்ட உகந்த ஒன்றரைப்பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு:- கு. துரைராசா, ஓவசியர், 29, சந்தனமாதா கோவில் றோட், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். 1801

---

அரசடி ஒழுங்கை, புலோலி கிழக்கு, பருத்தித்துறையில் நவீன வசதிகள் உள்ள 5 அறைவீடு உடன் விற்பனைக்கு உண்டு. மு. நாகராசா, கிழுவப்பை ஒழுங்கை, புலோலி கிழக்கு, பருத்தித்துறை. 1852

---

திருநெல்வேலியில் குடியிருப்பதற்கு வசதியான ஒரு பரப்புக்காணி விற்பனைக்கு உள்ளது. தொடர்பு; ச. புவனசுந்தரம் நொத்தாரிசு, வளாக ஒழுங்கை. 1834

---

மானிப்பாயில் றோட்டுப் பக்கமாக பாதை உள்ள ஐந்து பரப்புக்காணி புக்கைதின்னி பிள்ளையார்கோவில் ஒழுங்கை, ஆனைக்கோட்டையில் விற்பனைக்குண்டு. பகல் 1மணிக்கு முன் எந்த நாளிலும் தொடர்பு கொள்ளவும். பாலாம்பிகை துரைசிங்கம், புளியடிச் சந்தை ஒழுங்கை, மானிப்பாய் தெற்கு. 1858

---

நல்ல நிலையில்உள்ள ஒஸ்ரின் B M C 24 சிறி தொடரிலக்கமுள்ள லொறி உடன் விற்பனைக்குண்டு. 112, சிவராசா அவனியூ, பலாலிறோட், யாழ்ப்பாணம். 1845

---

அரியாலையில் கண்டி வீதி அண்மையில் 4 பரப்பும், கச்சேரியடியில் 1½ பரப்பும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பர இல: 1795, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1795

## விற்பனைக்கு

குளிர் சாதனப்பெட்டி, கலர் ரி. வி. (26 இஞ்சி) ரி.வி. டெக், சிங்கர் தையல் யந்திரம் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- இல. 5, சென்பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம். 1840

---

சீமாட்டி பாம்ஸ் உற்பத்திப் பொருட்கள் முட்டை, புறொயிலர் இறைச்சிககோழிமொத்த சில்லறை விற்பனவுக்கு உண்டு. சீமாட்டி றெக்ரைல்ஸ் அன் சன், 153, நவீனசந்தை, யாழ்ப்பாணம். ரெலிபோன்: 24096. (1843)

---

பாவிக்கப்படாத இரண்டு முதிரை யன்னல்கள், நான்கு 15 அடி கப்புகள் பாவித்த கப்புகள், பனை வளைகள் விற்பனைக்கு உண்டு. நன்ருகக் காய்ந்த விறகு கையிருப்பிலுள்ளது. தம்பிஜயா விறகு காலை, 46, பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார்பண்ணை. 1849

---

முல்லைத்தீவு—பரந்தன் பிரதான வீதி 4-வது மைலில் (பிரதான வீதிக்கு அருகாமையில்) விரைவில் நீர்ப்பாசனம் பெறக்கூடிய நான்கு ஏக்கர் வயலும், அதற்கு அண்மையில் நீர்ப்பாசன வசதியுள்ள அரை ஏக்கர் வயலும் விற்பனைக்குண்டு, (வயல் எல்லைகளாக ஆற்றோரம் உண்டு) விபரங்களுக்கு:- ப. ஸ்ரீஆனந்தராசா, 2ம் கட்டை, முரசுமோட்டை அல்லது வ. காங்கேசன், கந்தசுவாமிகோவிலடி, நீர்வேலி. 1847

---

யூரியா உரம் விற்பனைக்குண்டு. M. G. M. For age Stores, No 208, முதலாம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 22611 1839

---

மோட்டர்ஸ், ஒக்சிசன் வெல்டிங் பெட், கொம்பிரஸர், ரில், லெத்துல்ஸ், சோக், மெயின் சுவிஸ், ஸ்டாட்டஸ், தராசு விற்பனைக்குண்டு. தொடர்பு: 4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர். 1859

---

வீடடுப்பாவனைப் பொருட்கள் Carpet, Kenwood, [Major] ஐந்து இணைப்புகளுடன், Vacuum cleaner, ஐந்து அடுப்புகளுடனும், Oven உடனும் Gas Cooker, மற்றும் பலவித உபகரணங்கள் உடன் விற்பனைக்குண்டு. கிருபாகரன், C/O சிவமுத்துலிங்கம், முதலியார் வளவு, தலையாளி, கொக்குவில். 1860

---

வீடு கட்டுவதற்கு தேவையான யன்னல், கதவு, மற்றும் நிலைகள், கூரைமரங்கள், கூரை, அஸ்பெஸ்டோஸ் சீட்டுகள், இரும்பு. B throom Fittings, பிணைச்சல், பூட்டு முதலியவை விற்பனைக்குண்டு. தொடர்பு:- தி குகபாலன், 84, ரெம்பிள் றோட். யாழ்ப்பாணம். 1813

## வகுப்புகள்

பல்கலைக்கழக பட்டதாரி படிப்புக்கு சமமான பாடத் திட்டத்தின்படி கலை (B.A.), வர்த்தகம் (B. Com.), விஞ்ஞானம் (B.Sc.) (Physical and Maths, B10) பட்டப்படிப்புகள் கல்வித் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் ஆரம்பிக்கப்படவுள்ளன. A/L நான்கு பாடங்களில் சித்தியடைந்தவர்கள் 5-3-85 முன் விண்ணப்ப படிவங்களுக்கு தொடர்பு கொள்ளவும். அதிபர், உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 1828

## WANTED

Lecturers are wanted for Arts, Science, Commerce Faculties Salary will be paid according to the qualifications and experience. Apply on or before 5-3-85, Director, College of Higher Studies, Anaipanthy, Jaffna 1829

## VACANCY

We are a young dynamic manufacturing organisation, 5 miles from Town, and employing a staff of 15. We are diversifying, and looking for a person with proven ability to take complete charge of all accounting functions. He/She must be a self-starter, results-oriented and fully conversant in preparing paysheets, E. P. F./ E. T. F. payments, costing, final accounts etc., A salary of around Rs. 1000/- is envisaged, and only those who can work independently need apply to Box No:- 720, C/o Eelanadu Ltd., Jaffna

## வாடகைக்கு

சப்பல் வீதியில் ஓர் வீட்டின் பகுதி [Anex) வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு C. கணேசன், 25, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். T.phone: 22160. 1833

## கல்வி

''பாலர் ஆசிரியர் பயிற்சி 1985''க்குரிய பயிற்சி வகுப்பு மார்ச் இரண்டாந் திகதி ஆரம்பமாகின்றது. ஜி சி. ஈ சித்தியடைந்த பெண்கள் விண்ணப்பிக்கலாம். முகவரி: பாலர் ஆசிரியர் சங்கம், 610 (418), கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1831

## முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்றம்
புலோலிதெற்கு காலஞ்சென்ற கந்தப்பர் கணபதிப்பிள்ளை என்பவரது மரணசாதன சொத்து விடயத்தில்.

— மரணமெய்தியவர்

மரணசாதன
நியாயாதிக்க
வழ இல: 1201

கணபதிப்பிள்ளை கைம்பெண் இலட்சுமிப்பிள்ளை புலோலி தெற்கு.

—மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிட்டவரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதமன்றில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1984-ம் ஆண்டு வைகாசி மாதம் 07-ம் திகதியன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1985-ம் ஆண்டு மாசிமாதம் 12-ம் திகதி

நீதிமன்ற ஆணைப்படி
ச. நடராசா
பதிவாளர்.

வரைவு
கே. முத்துக்குமார்
மனுதாரின் சட்டத்தரணி. 1856

## தேவை

உயர் வகுப்புகளுக்கு தாவரவியல் கற்பிக்க ஆசிரியர் உடன் தேவை. தொடர்பு: —
அதிபர்,
இறம்பைக்குளம்,
மகளிர்
மகாவித்தியாலயம்,
வவனியா. 1846

## முகாமில்....

[1ம் பக்க 4ம்கலத்தொடர்ச்சி)

பெருமளவும் செல்வதுண்டு.

இம்மாதம் 11ம் தேதி காலையில் 13 வயோதிபர்கள், தங்கள் வீடுகளைப் பார்ப்பதற்கு சென்றதாகவும். அவர்கள் இதுவரை திரும்பி முகாம்களுக்கு வரவில்லை என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சுமார் 60 பேர்வரை முகாம்களிலிருந்து தங்கள் வீடுகளுக்குச்சென்று திரும்பாமலிருக்கலாம் என அஞ்சப்படுகிறது சில முகாம்களில் மட்டுமே இக்கணக்கெடுப்பு பூர்த்தியாகியுள்ளது. இன்னும் 12 முகாம்களில் கணக்கெடுப்பு பூர்த்தியாகவில்லை.

## காணவில்லை

இருபாலை கோண்டாவில் வீதியில் செ. இரவீந்திரன் என்பவருடைய அடையாள அட்டை இல. 641772216 V தவறிவிட்டது. கண்டெடுத்தவர் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். செ இரவீந்திரன், பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் (1791)

கலர் பிலிம் சுருள்களை
PROCESSING + PRINTING
செய்வதற்கு
கொழும்பு ஸ்ருடியோ

## யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை உபஅலுவலகம், புத்தூர் பகிரங்க ஏலவிற்பனை

புத்தூர் உப அலுவலகத்திற்குரிய பழைய நிலைகள், பழைய கார்பற்றறி, வானொலி வைக்கும் பழைய பெட்டி, வெற்றுத்தார்ப் பீப்பாக்கள், பழைய கேற் கம்பி நெற், உடைந்த கதிரைகள், பழைய கரம்போர்ட், சிறிய கேற் பலகைகள், கம்பிகள், பழைய பனை மரங்கள், உடைந்த கூரை ஓடுகள், பழைய மல சுத்திகரிப்பு வண்டி, பழைய சஞ்சிகைகள், பழைய புதினப் பத்திரிகைகள், கம்பி யன்னல்கள், புளியம்பழங்கள் - 1985 முதலியன 25-02- 985 ஆந்திகதி மு ப. 10-00 மணிக்கு உப அலுவலகத்தில்வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் சித்திரக் கேள்விக்காரர் கேள்வித்தொகை முழுவதையும் உடன்செலுத்தி அன்றே பொருட்களை அப்புறப்படுத்திக்கொள்ளவேண்டும்.

மேலும் விபரங்களை அலுவலக நேரங்களில் இவ்வுப அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. கிருஷ்ணமூர்த்தி
அதிகாரமளிக்கப்பட்ட
உத்தியோகத்தர்
யா. அ. சபை உபஅலுவலகம்,
புத்தூர், 14-02-1985.
1857

## VACANCY

JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE

LECTURER : Electrical Engineering
Candidate with Electrical Engineering degree can apply.

SALARY: Rs. 1,900/- to Rs. 2,600/- per month

INSTRUCTOR: Engineering Drawing
Electronics

Candidates with degree or diploma qualifications in the above fields can apply

SALARY : Rs, 1,200/- to Rs. 1,800/- per month

Apply with full bio-data to Director,
Jaffna College Technical Institute. vaddukoddai.
Closing date—26th February, 1985.

1838 DIRECTOR

## கேள்விப் பத்திரம்

### சுண்ணம்புக்கல் 'குவாறியில்' இருந்து கல்நொருக்கி இயந்திரத்திற்கு (கிறசர்) ''ரிப்பர் லொறிகளில்'' ஏற்றிப் பறித்தல்

கீரிமலைக்கருகிலுள்ள கலட்டியில் அமைந்துள்ள எமது குவாறியில் இருந்து தொழிற்சாலையில் உள்ள கல்நொருக்கி இயந்திரத்திற்கு (கிறசர்) ''ரிப்பர் லொறிகளில்'' சுண்ணம்புக் கற்களை கொண்டு செல்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கொண்டு செல்லப்பட வேண்டிய தூரம் அண்ணளவாக 1½ கிலோமீற்றர்.

கேள்விப்பத்திரங்கள் கீழ் குறிப்பிட்டவாறு ஒப்பந்தக் காரரால் தயாரிக்கப்பட்டு 1985 - 02 - 18 ம் திகதி திங்கட் கிழமை காலை 10-30 மணிக்கு முன் 'உதவிப் பொது முகாமையாளர் காரியாலயத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் (Tender Box) சேர்க்கும்படி கேட்டுககொள்ளப்படுகின்றது.

பொதுமுகாமையாளர்,
லங்கா சீமெந்து லிமிட்டெட்,
காங்கேசன்துறை.

### மாதிரி கேள்விப் பத்திரம்

கேள்விப்பத்திர இல: எல். சி. எல்/ கே/ ரி/ 01 /85

1. ஒப்பந்தக்காரரின் பெயர்:
2. விலாசம்:-
3. ஒரு தொன் சுண்ணம்புக்கல் ''குவாறியில்'' இருந்து ''கிறசருக்கு'' கொண்டு செல்வதற்கான கூலி:- ரூபா சதம் / தொன் ஒன்றுக்கு
4. உபயோகிக்கப்படும் 'ரிப்பர்' 'லொறிகளின்' பதிவு இலக்கங்களும், கொள்ளளவுகளும்.

பதிவு இலக்கம் கொள்ளளவு தொன்னில்

1.
2.
3.
4.
5.

மேற்படி ''ரிப்பர் லொறிகள்'' பொதுமுகாமையாளரால்லோ அல்லது அவரது பிரதிநிதிகளோ அறிவிக்கப்பட்ட குறித்த நேரத்தில் வேலைக்கு உபயோகிக்க அனுப்புவேன் என்பதனையும் மேல் குறிப்பிட்ட தொன் ஒன்றுக்கான விலைக்கூற்றிற்கு வேலை செய்ய சம்மதிக்கிறேன் என்பதனையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

1854 ஒப்பந்தக்காரரின் கையொப்பம்.

## மணிவாக்கு

ஒரு நாட்டின் பத்திரிகைகளில் நல்ல செய்திகள் நிறைந்திருந்தால் அந்நாட்டின் நல்லவர்கள் சிறைச் சாலைகளில் நிறைந்திருப்பார்களென்பது அர்த்தம்.

—ஓர் அறிஞர்

## நமது நோக்கு

# தேசிய ஒருமைப்பாடு

நாட்டையும், இனத்தையும், நாட்டு ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும் பொருட்டு தேசிய போராட்டத்தில் பங்குபற்றப் போவதாக நிதிஅமைச்சர் நிஸங்க விஜயரத்தின குரலெழுப்பியிருக்கிறார். இதற்காக தம்முடைய தொகுதியாகிய டெடிகமவிலிருந்து 150 சிங்களக் குடும்பங்களுடன் வட பகுதியில் குடியேற விரும்புகிறார் ஆயுதம் தாங்க வேண்டுமானால் அதற்கும் தயாரென்று கூறி இருக்கிறார்.

இச்செய்தியை பத்திரிகையாளர் மகாநாட்டில் வெளியிட்டது ஒரு சந்தேகத்துக்குரியதானாலும் இது வரவேற்க வேண்டியது.

அவருடைய தீர்மானத்தில் 'இனத்தையும்' என்பதை இனங்களையும் என்று திருத்தம் பெற்றால் இவருடைய திட்டம் பெரு வெற்றி பெறலாம்.

ஆயுதம் தாங்கவேண்டிய அவசியம் இல்லாமலே போய்விடுமென்பது எமது நம்பிக்கை.

கல்வி அமைச்சராக டாக்டர் நிஸங்க இருந்தகாலத்தில் அவர் பேராசை கொண்ட திட்டம் இன்றும் நிறைவேறவில்லை யென்பது நாட்டின் தவக்குறைவு எனலாம். வள்ளுவரின் திருக்குறளை சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மொழி பெயர்ப்பதோடு நாட்டின் ஒவ்வொரு பாடசாலையிலும் குறள் பிரத்தியேகமாகப் படிப்பிக்க வேண்டுமென்ற பேராவல் கொண்டிருந்தார். அது நிறைவேறவில்லை.

ஒருவருடைய பெருமையை அவருடைய நண்பர் குழாத்தைக்கொண்டு கணிக்கலாம். அமைச்சர் நிஸங்கவின் ஆப்த நண்பன் இலங்கைப்பல்கலைக் கழகத்தில் அவருடன் அவருடைய சிபார்சிலேயே டாக்டர் பட்டம் பெற்ற காந்தியவாதி இன்று அமரரான தெ. பொ. மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் எனவே தமிழரின் நண்பன் அமைச்சர் நிஸங்க.

இத்தகைய பெருமையுடைய ஒருவர் சிங்கள மக்களுடன் குடியேறி நாட்டின் மொழி, மதம், ஒருமைப்பாடு பேண முயன்றால் தேசிய பிரச்னையென்று இன்று கூறப்படும் தமிழர் பிரச்னை மாற்றம் அடையும்

பிரச்னைக்குத் தீர்வு காண்பதென்றால் பிரச்னையின் உருவம் மாறுவது என்றொரு கருத்துண்டு. அந்த நிலையை அமைச்சரின் உத்தேச யாழ்ப்பாண வாழ்வுநிறைவேற்றும் ஆயுதப்போராட்ட அவசியமாகாதென்பது தெளிவு

அமைதியான தீர்வுகாண வழிபிறக்கும்.

நாட்டைப் பாதுகாக்க வேண்டிய தேசியப்படை ஒன்று அவசியமென்பதை நாமெல்லோரும் உணர்கின்றோம்.

இன்றைய படையினரின் பயிற்சி வட்பகுதிப் பயங்கரவாத ஒழிப்பில் பெற்ற அரைகுறைப் பயிற்சியே

திறமையுடைய தேசியப் படையில் முன்னணி வகிக்கும் தகைமையுடைய தமிழ் இளைஞர்கள் இப்படைக்கு உதவவேண்டும்.

எனவே இன்றைய தேசியப் பிரச்னை அமைதியான தீர்வுகாணவும் தேசிய மொழிகள், மதங்கள் இனங்கள் பாதுகாக்கப்படவும் அமைச்சரின் உத்தேச திட்டம் உருவானால் ஆயுதப் போராட்டத்தில் எங்கள் நாட்டை வேற்று நாடு வெல்வது சாத்தியமாகாது,

ஜனாதிபதி ஜெயவர்த்தன ஜனாதிபதி தேர்தல் காலத்தில் யாழ்ப்பாண விஜயத்தில் தாம் ஜனாதிபதியாகத் தெரியப்பட்டால், யாழ்ப்பாண மக்களுடன்காலத்துக்குக்காலம் இங்குவந்து வாழ விருப்பம் தெரிவித்தார்.

இன்று அமைச்சர் நிஸங்க வெளியிடும் திட்டம் அவ்வாறு பிசுபிசுக்காதிருக்கவேண்டுமென்பதே எமது பெரு விருப்பம்.

## சிவராத்திரிவிழா

[உருத்திரபுரம்)

உருத்திரபுரம் சிவாலயத்தில் நாளை ஞாயிறு சிவராத்திரி விழா அனுஷ்டிக்கப்படுகிறது திங்கள் அன்னதானம் இடம்பெறும்

○

(யாழ்ப்பாணம்]

சங்கானை வெல்வில் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் சிவ ர த்திரி விழா நடைபெறவுள்ளது இன்று சனி பிற்பகல் சங்காபிஷேக யாகசாலைப் பூசையும் நாளை ஞாயிறு பிற்பகல் சங்காபிஷேக விசேஷ பூசையும் மற்றும் நான்கு ஜாம பூசைகளும் சுவாமி வீதி உலாவும் நிகழும்.

## வடமராட்சி பகுதியில் தும்பு உற்பத்தி பிரபல்யம்

[கரவெட்டி]

பனம்பொருள் ஏற்றுமதிக் கம்பனியின் முயற்சிகளையடுத்து வடமராட்சிப் பகுதியில் பனந்தும்பு உற்பத்தி அண்மைக் காலமாக பிரபல்யமடைந்து வருகிறது

இந்தஏற்றுமதிக் கம்பனியினரால் அளிக்கப்பட்ட பயிற்சிகளையடுத்து வதிரி மனோகரா சனசமூக நிலைய மாதர் குழுவினரும், உடுப்பிட்டி இராஜலிங்கம் சனசமூக நிலையத்தினரும் இத் தும்புத்தொழிலில் மும்மரமாக ஈடுபட்டுள்ளார்கள்.

இதுவரையில் இவர்கள் முறையே 50 கிலோகிராம், 10 கிலோ கிராம் தும்பை உற்பத்தி செய்துள்ளனர்.


ஏற்றுமதி அபிவிருத்திக் கம்பனி இத்தும்பினை கிலோ 10 ரூபா வீதம் வாங்குகிறது.

இது ஒருபுறமிருக்க, இக்கம்பனியும் மந்திகையில் எழுபத்தி ஐயாயிரம் ரூபா செலவிலான தும்புபதனிடும் நிலையம் ஒன்றை அமைத்துவருகிறது இதில் சுமார் 22 ஆயிரம்ரூபா பெறுமதியான கட்டட வேலைகள் இதுவரையில் முடிவடைந்துள்ளன இதன் நடவடிக்கைகளில் இக்கம்பனி மூகாமையாளரும் பனம்பொருள் கூட்டுறவு உதவி ஆணையாளருமான திரு ச வேலாயுதம்பிள்ளை ஈடுபட்டுவருகிறார் விரைவில் இந்த நிலையம் திறக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

வருமானம்மிக்க இந்தப் பனந்தும்பு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுப் பயன்பெற விரும்பும் இளைஞர், யுவதிகள் இக்கம்பனியின் செயலாளர் திரு செ. தங்கராசா, கட்டைவேலி-உடுப்பிட்டி தெ ப. பொ. கூ. சங்கம், நெல்லியடியுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

# சுந்தரரின் சாதனைகள் தமிழர்களுக்கு போதனைகள்!

## 'அடங்காத்தமிழன்' வாழ்வில் சில சுவையான சம்பவங்கள்



தமிழ் மக்களை மட்டுமன்றி தமிழ் தலைவர்களையும் ஒற்றுமை டடுத்துவதில் அக்கறை கொண்டிருந்தவர் பெரியார் சுந்தரலிங்கம்.

1956-ம் ஆண்டு தமிழர் ஒருவரை இலங்கையின் எதிர் கட்சி தலைவராக்க வேண்டும் என இரவு பகலாக உழைத்தார். அப்போது தமிழ் பகுதிகளில் தமிழரசு கட்சி கூடிய ஆசனங்களை பெற்றிருந்தது தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜி ஜி. பொன்னம்பலமும் வெற்றிபெற்றிருந்தார் கிழக்கு மாகாணத்தில் சில முஸ்லிம்களும், சுயேட்சையாக போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தனர். வவனியாவில் பெரியார் சுந்தரலிங்கம் வெற்றிபெற்றிருந்தார். தந்தை செல்வநாயகத்தை எதிர்ட்சித்தலைவராக்க வேண்டும் என்பது அவரது தணியாத ஆசை முதலில் ஜி ஜி யை சந்தித்தார். தமது விருப்பத்தை தெரிவித்தார். ஜி ஜி. சம்மதித்து விட்டார் பின்னர் முஸ்லிம் எம் பி க்களைசந்தித்தார் அவர்களும் சம்மதித்துவிட்டனர். பினனர் தந்தை செல்வநாயகத்தை சந்தித்து தமது விருப்பத்தை தெரிவித்தார்

பாராளுமன்றம் இதற்காக கூடியதினம் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் ஜி ஜி.க்கு ஒரு முக்கிய வழக்கு இருந்ததால் எதிர்க்கட்சித்தலைவர் தெரிவை மறுநாள் வைக்கும்படி பெரியார் சுந்தரலிங்கத்திடம் தெரிவித்திருந்தார். இந்த விஷயம் தந்தை செல்வாவுக்கு தெரிவிக்கப்பட்டு மறுநாள் வைப்பதென முடிவுசெய்யப்பட்டது ஆனால் எதிர்பாராத சூழ்நிலையில் அன்றைய தினமே எதிர்க் கட்சிதலைவர் தெரிவு நடைபெற்றுவிட்டது. இதனால் தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவர் பதவி பெறமுடியாமல் போய்விட்டது. இவற்றை பெரியார் சுந்தாலிங்கமே ஒரு சமயம் என்னிடம் தெரிவித்தது கவலைப்பட்டார். ஆனால் 20 ஆண்டுக்கு பின்னர் தமிழர் ஒருவர் இலங்கையின் எதிர்க் கட்சி தலைவராக வேண்டும் என்ற பெரியாரின் தணியாத ஆசைநிறைவறியது. 1977-ல் திரு ஏ. அமிர்தலிங்கம் அப்பதவியை பெற்றார்.

### ஈழத்தமிழர் ஒற்றுமைமுன்னணி

ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணி என்ற இயக்கத்தை அமைத்து தமிழர்களை ஒற்றுமைப்படுத்துவதில் அவர் அயராது உழைத்தார் இந்த இயக்கத்தின் சார்பில் 1960 தேர்தலில் போட்டியிட்டார். கிளிநொச்சி மற்றும் சில தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தினர். அப்பொழுதெல்லாம் புதுமாதிரியான தேர்தல் பிரசாரத்தில் அவர் ஈடுபட்டார். தமது பெரிய காரையே பிரசார மேடையாக மாற்றினர். காரில் ஒலி பெருக்கி இணைக்கப்பட்டிருக்கும் வீதியால் கார் சென்று கொண்டிருக்கும் மக்கள் கூட்டத்தை கண்டதும் கார் நிறுத்தப்படும். அவ்விடத்தில் ஒலி பெருக்கியில் பேச ஆரம்பித்து விடுவார். காரில் அவருடன் அவரது பாரியார் உதவிக்கு இருப்பார்

### பிரசாரக் கூட்டம்

1960-ம் ஆண்டு ஒருசமயம் கொடிகாமத்தில் அப்படி ஒரு கூட்டம் நடந்தது அன்று வெள்ளிக்கிழமை சந்தை, சரியான சனக்கூட்டம் அவருடைய கார் வந்தது சந்தைக்கு முன்னால் நிறுத்தப்பட்டது ஒலிபெருக்கியில் பேச ஆரம்பித்தார் கூச்சலும் குழப்பமுமாக இருந்தது. கற்கள் வீசப்பட்டன 'அடங்காத் தமிழன்' அஞ்சவில்லை' அடிபணியவில்லை காரைவிட்டு இறங்கி கம்பிரமாக சிரித்தபடி 'புலிக்கு பயப்படாத நான் எலிக்கு பயப்படுவேனா? என்றபடி பேச ஆரம்பித்தார் கூச்சல் அடங்கியது ஒருமணி நேரம் பேசினார் மக்கள் கேட்டுக் கொண்டிருந்தனர் இடையிடையே கரகோஷம் செய்தனர் பின்னர் அதே மக்கள் அன்புடன் வழியனுப்பி வைத்தனர்.

சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஒரு சமயம் காணி வழக்கு ஒன்று நடந்தது. கட்சிகாரர் சார்பில் பெரியார் சுந்தரலிங்கம் ஆஜராகியிருந்தார் அப்பொழுது தேர்தல் காலம். அவரும் போட்டியிட்டார். அதனால் நீதிமன்றத்தில் அதிக நேரம் செலவிடமுடியவில்லை. தவணை தருமாறு நீதிபதியிடம் கேட்டார். நீதிபதி ஒரு திகதியை குறிப்பிட்டு, அத்திகதிக்கு வழக்கை தவணை போட்டார் உடனே பெரியார் சுந்தரலிங்கம் எழுந்து தமது டயரியை புரட்டி பார்த்துவிட்டு ''அத்தேதியில் நான் பாராளுமன்றத்தில் இருப்பேன் வேறு ஒரு தேதி தாருங்கள்'' என்றார் கோர்ட்டில் ஒரே சிரிப்பொலி. நீதிபதியும் சிரித்தபடி வேறு திகதி கொடுத்தார்.

### குருக்களுக்கு மரியாதை

மல்லாகம் நீதிமன்றத்தில் மாவிட்டபுரம் கோவில் தொடர்பான ஒரு வழக்கு கோவில் சார்பில் பெரியார் சுந்தரலிங்கம் ஆஜராகியிருந்தார். விசாரணை ஆரம்பித்துவிட்டது நீதிமன்றம் நிரம்பி வழிந்தது எல்லோரும் நீதிமன்றத்தில் அமர்ந்திருந்தனர். அச்சமயம் வாசலினால் மாவிட்டபுரம் பிரம்மஸ்ரீ துரைச்சாமி குருக்கள் நீதிமன்றத்திற்குள் வந்து கொண்டிருந்தார். அடிக்கடி வாசல் பக்கத்தை பார்த்து கொண்டிருந்த பெரியார் சுந்தரலிங்கம் திடீரென எழும்பி சிரம் தாழ்த்தி அவரை வரவேற்று ஆசனத்தில் அமரச் சொன்னார் அச்சமயம் நீதிமன்றத்தில் இருந்த சகலரும் எழுந்து நின்று மரியாதை செய்தார்கள். இதனை நீதிபதி தலையை நிமிர்ந்து அவதானித்துக் கொண்டார். அந்த வழக்கில் அவருக்குத்தான் வெற்றி கிடைத்தது.

### சிவகுமாரன் வழக்கு

1974-ல் சுதந்திரக்கட்சி உதவி அமைச்சர் சோமவீர சந்திரசிறி யாழ்ப்பாணம் வந்தபோது அவரது காருக்கு குண்டு வைக்கப்பட்டது இச் சம்பவம் தொடர்பாக உரும்ப

கா. யோகநாதன்

ராய் சிவகுமாரன்மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அச் சமயம் வடக்கில் சிவகுமாரன் மட்டுமே துணிச்சலுடன் எதிர்ப்பை காட்டுவதில் ஈடுபட்டிருந்தார். சிவகுமாருக்கு சட்டத்தரணிகள்எவரும் ஆஜராகவில்லை. சிவகுமாரனின உறவினர் ஒருவர் அப்போது இளம் சட்டத்தரணியான ராஜராஜேஸ்வரன் தங்கராசாவுடன் தொடர்பு கொண்டார். அவர் பெரியார் சுந்தரலிங்கத்தின் உதவியை நாடினார் இவ்வழக்கில் பெரியார் சுந்தரலிங்கம், இலவசமாக மாக ஆஜராக சம்மதித்தார்.

### பொலிசாருக்கு செல்வாக்கு

அப்போது பொலிசாருக்கு வடக்கில் செல்வாக்கு கொடி கட்டிப்பறந்தகாலம். இராணுவத்தினர் நடமாட்டமோ, அதிரடிப்படையினர் நடமாட்டமோ இல்லாதகாலம், பொலிசாரே பாதுகாப்பு நடவடிக்கையை கவனித்து வந்தனர். மக்கள் இராணுவத்தினரைக்கண்டு வெருளுவதுபோல் அப்போது பொலிசாரைக் கண்டுவெருண்டனர் அதனால் பொலிசாருக்கு மாறாக சாட்சி சொல்லத் தயங்கியகாலம் அது இவ்விஷயம் பெரியாரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது கீரிமலை 'மஹாலிங்கா வாசா'வில் வழக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டி.

(6-ம் பககம 3-ம் கலம் பார்க்க

### இலங்கை இனப்பிரச்னை:

# எந்தவகையில் தலையிடுவதென்று இந்தியஅரசே தீர்மானிக்க வேண்டும்

## 'அமிர்' கூறுகிறார்

சென்னை பெப் 15

''இலங்கையில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதை இந்திய மத்திய அரசு தடுத்து நிறுத்தி பங்களாதேஷ்போன்று நடவடிக்கை எடுக்கவேண்டும். இலங்கைப் பிரச்னையில் எந்த வகையில் தலையிடுவது என்பது பற்றி இந்திய அரசே தீர்மானிக்க வேண்டும்.''

இவ்வாறு தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:

''இலங்கையின் இனப்பிரச்னையில் இந்திய அரசு தலையிடாவிட்டால் தென்இந்தியாவின் ஸ்திரநிலைக்கே ஆபத்து ஏற்படும்.

''படுகொலைகளைத் தடுக்க வேற்று நாடுகள் தலையிடுவதை சர்வதேச சட்டம் கூட அனுமதிக்கிறது.

''மன்னார் மாவட்டத்தில் 32 பேர் இலங்கை ராணுவத்தால் சுட்டுக்கொலைசெய்யப்பட்டதாக 'லண்டன் ரைம்ஸ்' பத்திரிகையில் வெளிவந்தது உண்மையானது. மண்டபம் முகாமில் தங்கியுள்ள மன்னார் அகதிகள் தெரிவித்துள்ள தகவல்கள் அச்செய்திக்கு ஒத்தாகவுள்ளன.

''இலங்கை அகதிகளுக்கு உதவியளிக்கும்படி ஜெனிவாவிலுள்ள அகதிகள் ஐ நா. கமிஷனிடம் நட்புநாடுகள் கேட்கவேண்டும்'' என்றார்.

## கடலில் திடீர் சோதனை

[ஊர்காவற்றுறை]

காரைநகருக்கும், ஊர்காவற்றுறைக்கு மிடையிலான கடற்பிரதேசத்தில் கடற்படையினர் திடீர்ச் சோதனையை மேற்கொண்டனர்.

காரைநகர் சீ-நோர் தொழிற்சாலையிலிருந்து சில ஊழியர்கள் படகுகளில் ஊர்காவற்றுறைக்கு வந்துகொண்டிருந்தபோதே திடீரென அங்குவந்த கடற்படையினர் சோதனையிட்டனர்.

### ராமேஸ்வரத்துக்கு

## இலங்கையிலிருந்து மேலும் 312 அகதிகள் சென்றனர்

(சென்னை)

இலங்கையிலிருந்து 312 அகதிகள் நேற்று முன்தினமும் ராமேஸ்வரம் வந்தடைந்தனர்.

மண்டபம், ராமேஸ்வரம் முகாமில் 3,213 அகதிகள் தங்கியுள்ளனர். இவர்களில் 1,160 பேர் ஜூலைக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு இலங்கையிலிருந்து வந்தவர்களாவர்

460 அகதிகள் திருச்சிராப்பள்ளி, ராமநாதபுரம்போன்ற இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

### இந்திய மீனவர் சுட்டுக்கொலை:

## கொழும்பிலுள்ள இந்தியத்தூதரக அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது

(புதுடில்லி)

''ராமேஸ்வரம் கோடிக்கடல் அருகே கடந்த புதன் கிழமை இரவு இரண்டு இந்திய மீனவர்கள் இலங்கைக்கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டமை தொடர்பாக இந்திய அரசு கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்திலிருந்து அறிக்கையை எதிர்பார்த்துள்ளது.''

இவ்வாறு இந்திய வெளிவிவகார அமைச்சின் அதிகாரியொருவர் புதுடில்லியில் தெரிவித்தார்.

''இது தொடர்பாகப் பத்திரிகைச்செய்தியே வெளிவந்ததாகவும் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்திலிருந்து அதிகார பூர்வமான அறிக்கையை இந்திய அரசு இது குறித்து எதிர்பார்த்துள்ளதாவும் அந்த அதிகாரி கூறினார்.

### வவனியா மாவட்டம்:

## வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு விபரம்

(வவனியா)

இவ்வருடம் வவனியா மாவட்ட பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் வேலைத்திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி விபரம்:-

வவனியாவிவசாயப்பண்ணை பாடசாலை வேலி அடைப்பதற்கு 75 ஆயிரம் ரூபா, கனகராயன் குளம் தோடை வளர்ப்பு திட்டத்திற்கு கிணறு வெட்ட 50 ஆயிரம், பெரிய நெச்சிக்குளம் திருத்த வேலைக்கு ஒரு இலட்சத்து 75 ஆயிரம்ரூபா, குறிசுட்டகுளம், வைரவ மூன்று முறிப்பு குள வேலைகளுககு தலா ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா. பிரப்பன்குளம், கொந்தகாரன் குளம் திருத்த வேலைகளுக்கு தலா 60 ஆயிரம் ரூபா,

புதூர் நாகதம்பிரான் கோவில் வீதி ஒரு பையில் செப்பனின் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா, பூமடுவ சன சமூக நிலையம் புதிதாகக்கட்ட 50 ஆயிரம் ரூபா, கெபிலாச குளம் புதிய வீதிபோட 18.500 ரூபா, பாடசாலைகளுக்கு தளபாடம் வாங்க ஒரு லட்சம் ரூபா, கள்ளிககுளம் பாடசாலை வேலி போட 25 ஆயிரம்ரூபா, இளைஞர் சேவை மன்றத்திற்கு 50 ஆரயிம்ரூபா கிராமிய அபிவிருத்தி திட்டங்களுக்கு 80 இலட்சம் ரூபா, சனத்தொகை தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு 10 ஆயிரம் ரூபா, பெண்கள் அபிவிருத்தி வேலை தொடர்பான திட்டங்களுக்கு 60 ஆயிரம் ரூபா, போஷாக்கு நிகழ்ச்சி வேலைகளுககு 20 ஆயிரம் ரூபா, மரநடுகை திட்டங்களுக்கு 10 ஆயிரம் ரூபா, வீதி திருத்த வேலைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வவனியா திட்டமிடல் அதிகாரி திரு. ரீ. துரைசிங்கம் தெரிவித்தார்.

வவனியா மாவட்ட அமைச்சர் திரு ஜி டி. மகிந்தசோமா இதற்கான நிதி ஒதுக்கீடுகளைச் செய்துள்ளார்.

## பங்களாதேஷில் மாணவர்கள்

### வன்முறைகள் ஆர்ப்பாட்டங்கள்!

டாக்கா பெப் 15

பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில் நேற்று மாணவர்கள் வன்முறைகள், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக மாணவதலைவரொருவர் ராணுவத்தால் சுட்டுக் கொலை செய்யப்பட்டமைக்கு ஆட்சேபம் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள்.

இவர்கள் டாக்காவிலுள்ள பல்கலைக்கழக மொன்றின் கட்டிடத்தின் சில பகுதிகளுக்கும் தீ வைத்தனர்.

அதேவேளை எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ளபொதுத்தேர்தலை பகிஷ்கரிக்கப்போவதாக பங்களாதேஷின் இரு பிரதான எதிர்க்கட்சிகள் அறிவித்துள்ளன.

## சிதம்பரம் கப்பல் தீவிபத்து: 27 சடலங்கள் மீட்பு

சென்னை, பெப். 15

சிங்கப்பூரிலிருந்து சென்னை வந்துகொண்டிருந்தபோது தீ விபத்துக்குள்ளான சிதம்பரம் கப்பலிலிருந்து இதுவரை 27 பேரின் சடலங்கள் கருகிய நிலையில் மீட்கப்பட்டுள்ளன. சடலங்களைத் தேடும் முயற்சி தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

இக்கப்பலில் 702 பேர் பயணிகளும். 186 சிப்பந்திகளும் பயணம்செய்தனர். சிப்பந்திகளுக்குக் காயமெதுவும் ஏற்படவில்லை என்று கூறப்பட்டது.

### ரஜீவ் அனுதாபம்

சிதம்பரம் கப்பல் தீ விபத்தில் பலர் உயிரிழந்தமை குறித்து இந்தியப் பிரதமர் திரு ரஜீவ் காந்தி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு அனுதாபம் தெரிவிததுள்ளார்.

தமிழ்நாடு ஆளுநர் திரு. எஸ். எல். குரானாவும் இது தொடர்பாக இறந்தவர்களின் குடும்பங்களுக்கு அனுதாபம் தெரிவித்துள்ளார்.

## குழப்பமின்றி பரீட்சை நடாத்தக் கோரிக்கை

[சுண்டுக்குளி]

பெப்ரவரி 27-ம் திகதி முதல் மார்ச் 8-ம் திகதி வரை நடைபெறவுள்ள ஜி. ஸி. ஈ. [சாதரண] பரீட்சையை எவ்வித தடங்கலுமின்றி நடாத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அபிவிருத்திச் சங்கம் கோரியுள்ளது.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் இக் கூட்டம் நடைபெற்றது. பாடசாலை மாணவர்களின் பெற்றோர், மாணவ இயக்க அங்கத்தவர்கள், நலன்புரிச்சங்க அங்கத்தவர்கள் ஒன்றிணைந்து பரீட்சையை எவ்வித குழப்பமின்றி நடத்த சகலரது ஒத்துழைப்பையும் கோருவதென்று இக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

### ரூபவாஹினி

மாலை

5—00 செய்திகள்
5—05 கேலிச் சித்திர தொடர் நிகழ்ச்சி
5—30 ஆங்கில நிகழ்ச்சி
6—00 ஆங்கில விவரண நிகழ்ச்சி
6—30 செய்திகள் [தமிழ்]
7—00 ஆங்கிலத் தொடர் நிகழ்ச்சி
8—00 செய்திகள் [சிங்களம்]
8—25 சிங்கள தொலைக் காட்சி நாடகம்
9—00 செய்திகள் [ஆங்கிலம்]
9—20 இசை நிகழ்ச்சி
9—50 ஆங்கில தொடர் நிகழ்ச்சி
10—40 ஒளிபரப்புமுடிவு.

HOME FINANCE LTD
ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
யாழ்ப்பாணம்

பூகொடை ஆலையில் தயாரித்த நவீன ரக சீத்தை-பப்ளின், பிசாமா போன்ற பலரக துணிவகைகள் எங்களிடம் மொத்த விற்பனைக்கு உண்டு. சகாய விலை. விரும்பியோர் உடனே வந்து பார்வையிட்டு தெரிவுசெய்யவும்

NO. 82, KANNATHIDDY ROAD, JAFFNA.

BECON
STUDY CENTRE
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)
DAY CLASS
PHY:- திரு. சௌந்தி (ஒட்டமின்னியல்) 7 A. M.
CHE;- திரு. சண் 8 A. M.
PUR APP } திரு. A. பத்மநாதன் 9-30 — 11-30
வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன

# இன்றைய பலன்

மாதம்—மாசி
திகதி—5 (16-2-85)
வாரம்—சனி
திதி—துவாதசி முன்னிரவு வரை
நக்ஷத்திரம்—பூராடம் முன் இரவுவரை

மேடம் : புத்திரவழிச் சுகக் குறைவும், பணவரவு பற்றுக் குறைவும், பந்துஜனக் கை கலப்பும் உண்டாம்.

இடபம் : சத்துருவால் செடுதியும், சந்தோஷமின்மையும் சரீர சுகக்குறைவும், உண்டாம்.

மிதுனம் : களஸ்திர வழிச் சுகமும். கடமையில் ஈடுபாடும், கல்வியில் மந்தமும் உண்டாம்.

கடகம் : உடன்பிறந்தோர் உடல்நலம் குன்றும், உதவி செய்வோரே உபத்திரவத்தையும் செய்வர்.

சிங்கம் : புண்ணிய காரியங்களை நாடுவீர்கள், பிதா வழிச் சுகமும், பெரியோர் உதவியும் உண்டு.

கன்னி : தொழிலில் தொல்லையுண்டு. தொடர்ந்திடும் பகையாலே திகைக்க நேரும்.

துலாம் : லாபகரமான வரவுகளுக்கும் இடம் ஏற்படும், மூத்த சகோதரர் சுகக்குறைவுமுண்டாம்.

விருச்சிகம் : மனச் சஞ்சலங்ளுக்கும், இடப் பிரிவுக்கும் இடமுண்டு, கவனம் வேண்டும்.

தனுசு : மனச் சோர்வுக்கும் இடமேற்படும், துணிவே துணையென நடக்கவும்.

மகரம் : எதிர்பார்த்த வரவு தடைப்படும், சினேகித வழியாலும் சிக்கல் தோன்றும், பேச்சில் நிதானம் வேண்டும்.

கும்பம் : இளையசகோதரத்திளுல் இருப்பிடத்தில் சச்சரவிற்கும் இடமேற்படும்: பொறுமை வேண்டும்.

மீனம் : தாய்வழி சுகக் குறைவும், தனச்சிறப்பும் உண்டு, வாகனச் சொந்தக்காரர்களுக்குஅவதானம்வேண்டும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## மண்டலாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் கண்ணகை அம்பாளுககுக் கடந்த ஞாயிற்றுக்கிழமை குடமுழுக்கு விழா நிகழ்ந்தது தொடர்ந்தும் 48 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.


லிடோ சினிமா
தினசரி 10-30, 2-00
36 Chamber of Sholine (KaratteFilm)

வெலிங்டன்
(யாழ் நகர்)
10-30, 2-30 P.m
GREEN ICE
(Adults)

றீகல்
தினசரி 10-30, 2-00
மட்டும்
AN OFFICER AND A GENTLEMAN
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

றீகல் மினி
தினசரி 10-15, 1-30
மட்டும்
எம். ஜி. ஆர். சரோஜாதேவி
அசோகன்
நடிக்கும்
தேவர் பிலிம்ஸ்
தாய் சொல்லைத் தட்டாதே


## 41-ம் நாள் நினைவஞ்சலி

### அமரர் மு. வேலாயுதம்

மலர்வு: 1940–11–27 உதிர்வு: 1985–01-07



அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், அறிவின் சுடராய், பாசத்தின் பிறப்பிடமாய், வாழ்வின் வழிகாட்டியாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய், சமூகத்தின் மத்தியில் நன்மதிப்புப் பெற்று எம்மையெல்லாம் தாங்கமுடியாத துயரில் ஆழ்த்திவிட்டு மின்னலென அணைந்துவிட்ட எங்கள் தெய்வமே!

நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்தாலும், உங்கள் நினைவும், துயரும் எம்மைவிட்டுப் பிரியாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டும்.

அன்பு மனைவி, பிள்ளைகள், உற்ருர், உறவினர், நண்பர்கள்.

இருபாலை கிழக்கு, கோப்பாய். 1853

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### அமரர் சபாபதிப்பிள்ளை கந்தப்பு

மலர்வு: 27–12–1911
மறைவு: 18-01–1985

எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில்கொண்ட எங்கள் குடும்ப ஒளிவிளக்கே! உங்கள் ஆத்மசாந்திக்காக நாளும் பொழுதும் நீங்கள் வழிபட்டுவந்த மாயக்கைப் பிள்ளையாரை அனுதினமும் பிரார்த்திக்கிறேம்.

அந்தியேட்டிக் கிரியைகள் 16-02-85ல் எமது இல்லத்தில் நடைபெறும் உறவினர், நண்பர் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேம்.

இறுதிச் சடங்கின்போது நேரில் வந்து ஆறுதல்கூறியோர்க்கும், கடிதங்கள், தந்திகள் மூலம் அனுதாபம் தெரிவித்தோர்க்கும் எமது உருக்கமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேம்.

அன்பு மனைவி, மக்கள், சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சாளம்பை,
புலோலி மேற்கு, பருத்தித்துறை. 1786

## ஓராண்டு நினைவஞ்சலி



### செல்வி கலைவாணி அழகராஜா (கலா)

தோற்றம்: 10-10-1959
மறைவு: 16-02-1984

அன்பின் திருவுருவாய் அனைவருக்கும் இனியவளாய் எங்கள் குடும்பத்தின் செல்வமாய் விளங்கிய கலா - நீ எம்மை எல்லாம் துன்பக்கடலில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்து இன்றுடன் ஆண்டு ஒன்று ஆகிவிட்டது அம்மா! ஆயினும் நீ எம்முடன் இரண்டறக் கலந்து வாழ்வதாகவே உணர்கின்றேம்.

உனது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றேம்.

உனது பிரிவால் துயருறும்:

அம்மா, அப்பா, அண்ணு,
மற்றும் உறவினர்கள், நண்பர்கள்

தவம் அழகராஜா.
''கலைவாணி வில்லா''
வெளிச்ச வீட்டு முகப்பு,
கீரிமலை வீதி, காங்கேசன்துறை. 1789

## இடமாற்றம்

மங்களபதி வைத்தியசாலை தற்போது நல்லூர், சங்கிலியன் வீதியில் உள்ள அரச வீதி இல. 41/5 (பண்டாரக்குளம் பிள்ளையார் தெற்கு வீதிக்கு) இடமாற்றம்செய்துள்ளோம்.

டாக்டர் R. மங்களாம்பிகை அம்மாள்
D. A. M. (Cey.)

**மங்களபதி வைத்தியசாலை**
41/5, அரச வீதி, நல்லூர்,
1855

## தொழில்நுட்பவியலாளர் வெற்றிடங்கள்

யாழ். நகரில் உள்ள பிரபல நிறுவனம் ஒன்றில் தொலைக்காட்சி, றேடியோ ரேப்றெக்கோடர் மற்றும் எலக்ரோனிக் கைக்கடிகாரங்கள் திருத்துவதில் அனுபவம் பெற்ற தொழில் நுட்பவியலாளர்கள், பொறியியலாளர்கட்கான நான்கு வெற்றிடங்கள் உள்ளன.

தகுதியானவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல: 1866,
மே/பா, ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம்.
1866

## நன்றி நவிலல்

அண்மையில் அமரராகிய பரிஸ்டர் திரு. மு. அம்பலவாணர் அவர்களின் ஈமக்கிரியைகளில் பங்கு பற்றிய அனைவர்க்கும் பொதுவாகவும்; யாழ். பல்கலைக் கழக மருத்துவ பகுதியைச் சேர்ந்தவர்களுக்குச் சிறப்பாகவும்; அனுதாபச்செய்தி அனுப்பியோர், உதவி ஒத்தாசை புரிந்து பல வழிகளிலும் சிறப்பித்தோர் யாவர்க்கும் எமது உளம் நெகிழ்ந்த நன்றியறிதலைத் தெரியப்படுத்துகிறேம்.

வணக்கம்

இங்ஙனம்,
பரிஸ்டர் அம்பலவாணரின்
மனைவியும், மகளும்

''சற்குரு வாசா'',
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். 1841

## 31-வது நாள் நினைவஞ்சலி

அமரர்
### பெரியதம்பி நவரத்தினராசா

116, கண்டி வீதி – யாழ்ப்பாணம்


மலர்வு: 1940-03-11 மறைவு: 1985 01–17

எங்களையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்ம சாந்திக்காக கண்ணீர் அஞ்சலி செலுத்திப் பிரார்த்திக்கின்றேம்.

திருமதி கா. நவரத்தினராசா பிள்ளைகள்
(சதீஸ், குமார், சசிகலா, சசிரேகா)
மச்சான்மார், மச்சாள்மார், மாமன். மாமி.
1848

## 31-ஆம் நாள் நினைவு அஞ்சலி



### திரு வேலுப்பிள்ளை வாமதேவன்

தோற்றம்: 25-12-1909 மறைவு: 16-01-1985

மானிப்பாயை பிறப்பிடமாகியவரும், ஹற்றன், டிக்கோயா நகரசபை முன்னுள் தலைவரும் அர்ச் ஜோன் பொஸ்கோ கல்லூரி முன்னுள் உப அதிபரின் மரணச் சடங்கின்போது பங்குபற்றியும் பல விதங்ளில் அனுதாபம் தெரிவித்தும் அஞ்சலி செலுத்திய அனைவர்க்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றேம். தங்கள் அன்பான வாழ்க்கையை என்றும் நினைவுகூரும்

குடும்பத்தினர்.

மானிப்பாய். (1793)

## கொள்ளைகளின் எதிரொலி

# தொலைபேசி, தந்திச் சேவைகள் பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

துணுக்காயிலுள்ள தொலைபேசி பரிவர்த்தனை நிலைய 'றேடியோ' இயந்திர சாதனம் கொள்ளையடிக்கப்பட்டதால் யாழ்ப்பாணம்-கொழும்பு நேரடித் தொலைபேசித் தொடர்பு வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சாதனம் கொள்ளை அடிக்கப்படுவதற்கு முன்னர் யாழ்-கொழும்பு நேரடி தொலைபேசிக்கு 120 லைன்கள் இயங்கி வந்ததாகவும், கொள்ளையின் பின்னர் 15 லைன்கள் மட்டுமே இயங்குவதாகவும் அஞ்சல் தொலைத்தொடர்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். யாழ் அலுவலகத்திலிருந்து 'ரெலக்ஸ்' கருவி கொள்ளையடிக்கப்பட்டதாலும் தந்திக் கம்பிகள் கூட பல இடங்களில் வெட்டி எடுக்கப்பட்டதாலும் அவசர தேவைகளுக்கு தொலைத் தொடர்புகொள்ள முடியவில்லை என்றும் தந்திகள் கூட தபால்மூலம் அனுப்பப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு போன்ற வெளியிடங்களுக்கு குறிப்பிட்ட இலக்கங்களுக்கு தொலைபேசிஅழைப்புப் பதிவு செய்தும் பலமணித்தியாலங்கள் தாமதித்தே தொலைபேசி அழைப்புக் கிடைத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (மா)

### சாவகச்சேரியில் கொள்ளை

இதேவேளை சாவகச்சேரி தன்னியக்க பரிவர்த்தனை நிலையத்தில் உள்ள உபகரணங்கள் நேற்று முன்தினமிரவு கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இதனால் நாட்டின் எப்பகுதியிலிருந்தும் சாவகச்சேரிக்கு தொலைபேசித் தொடர்பு கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (மா-க)

### பற்றறிகள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்நகரிலுள்ள மூன்று வர்த்தக நிலையங்களில் நேற்று மாலை பற்றறிகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

வான், லொறி போன்ற வாகனங்களில் வந்த இளைஞர்களே துப்பாக்கி முனையில் பற்றறிகளையும் அரிசி மூடைகளையும் கொள்ளையடித்துள்ளனர் எனத் தெரியவருகிறது. (ரா)

## 'இந்த நடிவடிக்கைகளில் எமக்கு எவ்வித சம்பந்தமுமில்லை'

[யாழ்ப்பாணம்]

''சமீபத்தில் 'உரிமை கோரப்படாத நடவடிக்கைகள்' சிலவற்றைப்பற்றி மக்கள் மத்தியில் சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றைத் தெளிவுபடுத்தவேண்டியது எமது கடமையாகும். ஹட்டன் நாஷனல் வங்கிக் கொள்ளை, தனிநபர்களைக் கடத்தல், பணயம் கேட்டல், தனியார் வீடுகளில் கொள்ளை, நகைக் கடைகளில் கொள்ளை, போக்கு வரத்துச் சபை, அஞ்சல் நிலையம், தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்கம் ஆகியவற்றில் கொள்ளை ஆகிய நடவடிக்கைகளுக்கும் எமது அமைப்புக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. இவற்றினை வன்மையாகக் கண்டிக்கிறோம்''.

தமிழீழ செம்படை விடுத்துள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

### சுந்தர் நகனக்...

[1-ம்பக்கம்1கலத் தொடர்ச்சி]

தான வீதிகளூடாக எடுத்துச் செல்லப்பட்டு நவற்குளத்திலுள்ள அவரது திருலிங்க தோட்டத்தில் தகனம் செய்யப்படும்.

அமரரின் சகல பிள்ளைகளும் வவனியா வந்துவிட்டனர்.

### கொள்ளைபோன ரவைகள்மீட்பு

[கொழும்பு]

கடந்த ஞாயிற்றுக் கிழமை பாணந்துறைக் கடலில் சப்பலொன்றிலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட ரைபிள்ரவைகள் கொழும்பு துறைமுகப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இக்கொள்ளை சம்பந்தமாக 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பாணந்துறைக் கடற்கரைப் பகுதியிலுள்ள இடமொன்றில் இந்த ரவைகள் புனதத்து வைக்கப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

கொள்ளையடிக்கப்பட்டிருந்த இந்த ரைபிள் துப்பாக்கிரவைகள் கிழக்கு மாகாணப் பொலிஸாரின் உபயோகத்துக்காக பிரிட்டனிலிருந்து கொண்டு வரப்பட்டிருந்தன. [கி]

### அகதிகள்...

(1ம் பக்க 3ம்கலத்தொடர்ச்சி)

கள்முகாம்களில் இட நெருக்கடி பெருமளவில் காணப்படுகின்றது இதனால் மண்டபம் முகாமிலிருந்து நாகபட்டணத்துக்கு 100 குடும்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

திருச்சியைச் சேர்ந்த கோட்டப்பட்டுருக்கு 100 குடும்பம் அனுப்பப்பட்டுள்ளது.

தூத்துக்குடி சேலம், ஆகிய இடங்களுக்கும் தலா 100 குடும்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க, நேற்று முன்தினம் இரு இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுடடுக் கொல்லப்பட்டது தொடர்பாக இந்திய அரசு ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது.

இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் திரு. பேர்ணுட் திலகரத்னவைச் சந்தித்து இந்தியாவின் நிலையை வெளியிட்டார்.

இத்தகைய சம்பவங்களையிட்டு இலங்கை அரசு மிகவும் நிதானமாக இருக்கவேண்டுமென்றும், இறந்த இந்திய மீனவர்களின் குடும்பங்களுக்கு இலங்கை நஷ்டஈடு வழங்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

### லொறி....

[1-ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி]

பழுதடைந்த நிலையில் கிடந்த இந்த ஜீப் வண்டிக்குப் பொருத்துவதற்காக துப்பாக்கி இளைஞர்களால் நான்கு டயர்கள் கொண்டுவரப்பட்டதாயினும், அது சாத்தியப்படாததால், அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றின் மூலம் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. [ரா]

### புத்தகக் கடையில் சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ் நிலையத்துக்கு அருகாமையில் உள்ள பிரபல புத்தக - சஞ்சிகை - பத்திரிகைகள் விற்பனவு நிலையம் ஒன்று நேற்றுக்காலை ரோந்துப்படையினரால் சோதனையிடப்பட்டது

யாழ். நகரில் அச்சமயம் ஹெலிகொப்டர் ஒன்றும் தாழ்வாகப் பறந்து நிலைமைகளை அவதானித்தது.

### மாணவர்கள்...

(1-ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

இயங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அப்பகுதியில் உள்ள தமிழ் மாணவரது கல்வி பாதிப்படைந்துள்ளது'' என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

யாழ் பிரதேசத்திலுள்ள கல்வி வட்டாரங்களின் பாடசாலை மாணவ- மாணவிகள் நேற்றுக்காலை பாடசாலைவகுப்பறைகளுக்குச் சென்றதும் ஒருங்குசேர்ந்து தத்தமது பாடசாலைகளுக்கு முன்னுல் சுலோக அட்டைகளுடன் ஆர்ப்பாட்டம் செய்தனர் ஒரு மணித்தியாலம் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களுக்குப் பின்னர் மாணவர்கள் அமைதியாக தங்கள் வகுப்பறைகளுக்குத் திரும்பினர். (மா)

### யாழ். நகரில்...

(1-ம்பக்க 3ம்கலத் தொடர்ச்சி)

கொண்டு தீயணைக்கும் படை பராமரிப்புக்குச் செலவிடப்படும்''

''தீயணைக்கும் படையின் அலுவலகத்துக்கான கட்டிடச் செலவை யாழ். மாநகர சபை பொறுப்பேற்று அமைத்து வருகிறது என்றும் ஏப்ரல் மாதம் அளவில் கட்டிட வேலைகள் பூர்த்தியடைந்து விடுமென்றும் திரு. சிவஞானம் குறிப்பிட்டார்,

தீயணைக்கும் படைக்கு நிதியுதவி கோரி இலங்கையிலுள்ள கனடா தூதுவருடன் பல தடவை தாம் தொடர்பு கொண்டதன்பேரில் அதற்கான முழுச்செலவையும் அவர் பொறுப்பேற்றுக்கொண்டதையிட்டு திரு. சிவஞானம் மகிழ்ச்சி தெரிவித்தார்.

அதற்கான நன்றி தெரிவிப்பதற்காகவே இத்தீயணைக்கும் படைக்கு 'கனேடியன் தீயணைக்குப்படை' என்று பெயரிடப்பட்டுள்ளதாகக குறிப்பிட்ட ஆணையாளர், தீயணைக்கும் படை அங்குரார்ப்பண வைபவத்துக்கு கனேடிய தூதுவர் திரு மாட்டின் கொலகொட்டை அழைக்கவுள்ளதாகவும் சொன்னர். [மா]

### சுந்தரரின்

(4-மபக்க 5ம்கலத்தொடர்ச்சி)

ருந்தனர். பொலிசாருக்குப் பயந்து சாட்சிகள் உண்மையைச் சொல்ல மாட்டார்கள் என்று அவருக்கு கூறப்பட்டது அவர் கையில் இருந்த தடியால் பலமாக மேசையில் அடித்துவிட்டு 'ஹி ஹி ஹி ஹி' என பலமாக சிரித்தார். எனக்குத் தெரியாத பொலிசாரா. சாட்சியிடம் எப்படி உண்மையைக் கறப்பது என்று தெரியும் என்ருர்.

மறுநாள் வழக்கு விசாரணை பொலிஸ் தரப்பு சாட்சி கூண்டில் ஏறினுர் சாட்சியம் முடிந்ததும், பெரியார் குறுக்கு விசாரணையை ஆரம்பித்தார். 'நான் இருக்கிறேன் இந்த பொலிசுக்குப் பயப்படாமல் உண்மையை சொல்லும்' என்றுவிட்டு மளமளவென்று கேள்விக்கணைகளை தொடுத்தார். பாதியிலே சாட்சி உடைந்து விட்டது; வழக்கு பறந்துவிட்டது. அப்போது மாவிட்டபுரம் பிரச்னை நடந்த காலமாதலால் கோர்ட்டில் ஒரே ஜனத்திரள். அவருக்குப் பெரும் பாராட்டுக் கிடைத்தது.

அவர் சாதனைகள் ஏராளம். சோதனை மிகுந்த இக்கால கட்டத்தில் வேதனை மிகுந்த உள்ளங்களுக்கு அவை பெரும் போதனையாக அமையும். (க)

## மரண அறிவித்தல்

### வீரசிங்கம் ஜெயராசசிங்கம்

### (ஜெயா)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. வீரசிங்கம் ஜெயராசசிங்கம் [பொறியியலாளர்] காலமாகிவிட்டார். இவர் காலம் சென்ற ஓவசியர் க. வீரசிங்கத்தினதும், திருமதி. செல்லம்மா வீரசிங்கத்தினதும் அன்பு மகனும் Dr. கிருஷ்ணுளின் அன்புக் கணவரும், மருதா, அமுதா, அரவிநதன் ஆகியோரின் அன்புத்தந்தையும், திருநெல்வேலியைச் சேர்ந்த இளைப்பாறிய மாவட்ட நீதிபதி சி. தம்பித்துரையினதும், காலம் சென்ற திருமதி. மாருதப்புரவீகவல்லி தம்பித்துரையின்யினதும் அன்பு மருமகனும், திருமதி. பேரின்பவதி பாலசுந்தரம், திருமதி. Dr செல்வராணி விஜயராகவன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னரின் பூதவுடல் திருநெல்வேலி வடக்கு, ஆடியபாத வீதியிலிருக்கும் அவரது இல்லத்திலிருந்து ஈமக்கிரியைக்காக [16-02-85] சனிக்கிழமை காலை 11-10 மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

''மருதம்மா வைத்தியசாலை''
ஆடியபாத வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

1863

## மரண அறிவித்தல்


### திருமதி யோகம்மா சண்முகம்

திருமதி யோகம்மா சண்முகம் காலமானுர். இவர் காலஞ்சென்ற ஓவசியர் சண்முகத்தின் அன்பு மனைவியும், சபாநாதன் (ஓய்வுபெற்ற அரசாங்க காரியாலய உதவியாளர்), இராமநாதன் (உரக் கூட்டுத்தாபனம்), யோகநாதன் (நைஜீரியா), அருந்ததி, கமலாம்பிகை ஆகியோரின் அன்புத் தாயாரும், மகாலட்சுமி சபாநாதனின் மாமியாரும், மைதிலியின் பேத்தியுமாவார்.

17-02-1985 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு 34 (80) செட்டித் தெரு நல்லூர் இல்லத்திலிருந்து ஈமக்கிரியைகளுக்காகச் செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: ச. சபாநாதன் 1870

## மரண அறிவித்தல்



### கந்தையா காசிப்பிள்ளை [ஐயாத்துரை]

J. P.

நல்லூர்.

தோற்றம்: 25-10-1925

மறைவு: 15 02-1985

ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தரும், முன்னுள் நல்லூர் சந்தை குத்தகையாளர் காலமாகிவிட்டார். இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், இராசரத்தினம், வசந்தா (பொதுசன நூலகம், யாழ்ப்பாணம்), அரசரத்தினம் (சவூதி அரேபியா), வினிதா, குணரத்தினம் (ஹோலன்ட் Holland , சிவரத்தினம், தவரத்தினம் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் [17-2-85] ஞாயிறு காலை 10 மணிக்கு இல. 10, இராச வீதி, நல்லூர் இல்லத்தில் நடைபெற்று செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

1869 தகவல்:- கா. இராசரத்தினம்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Tele phone um 22nber 389-24126.